ஸ்ரீ :

ஸ்ரீமதே ராமானுஜாய நம :

நம்பெருமாள் விஜயம்

(ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:)

(மலர்- 301) Aug (2) / 2019

நம்பெருமாள், எம்பெருமானார் அருளால் முயன்றவன்

'ஸ்ரீ அஹோபில தாஸன்' க.ஸ்ரீதரன்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:
திருவே தஞ்சம்
திருவரங்கனே தஞ்சம்
தஞ்சமடைந்த நம் ராமானுஜன் திருவடிகளே தஞ்சம்

கைப்பொருள்கள் முன்னமே கைக்கொண்டார் காவிரி நீர்
செய்ப்புரள ஓடும் திருவரங்கச் செல்வனார்
எப்பொருட்கும் நின்று ஆர்க்கும் எய்தாது நான் மறையின்
சொற்பொருளாய் நின்றார் என் மெய்ப்பொருளும் கொண்டாரே.

காவேரி வர்த்ததாம் காலே காலே வர்ஷது வாஸவ:
ஸ்ரீரங்கநாதோ ஜயது ஸ்ரீரங்கஸ்ரீச்ச வர்த்ததாம்

ஸத்யம் ஸத்யம் புந: ஸத்யம் யதிராஜோ ஜகத்குரு:

உட்பொதிவு

1. லக்ஷ்மீ தந்த்ரம் 3

2. ஸ்ரீபாஷ்யம் ……………………………………………………………………......5

3. ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம் ……………………………………………….………9

4. ஆசார்ய ஹ்ருதயம்………………………………………………………………..12

5. திருவாய்மொழி (ஈடு வ்யாக்யானம்)..……....……………………………………..18

6. சது: ச்லோகீ (பெரியவாச்சான்பிள்ளை, நிகமாந்த மஹாதேசிகன் வ்யாக்யானங்கள்)
…………………………………………………………………………………....24

Website: www.namperumal.com email: sridharan_book@yahoo.co.in
Blog: namperumal.wordpress.com Groups: groups.yahoo.com/emperumanar

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீபாஞ்சராத்ர ஆகம நூலான

லக்ஷ்மீ தந்த்ரம்

(பகுதி – 121)

31. ப்ரஜ்ஞாதாரோ ஹி அஹம் சக்ர ப்ரக்ருஷ்டஜ்ஞாந ஜந்மபூ:
ஸாஹம் ப்ரஜ்ஞாப்ரஸூர் விஷ்ணோருதயேந ஸமந்விதா

பொருள் – சக்ரனே! மிகவும் உன்னதமான ஞானம் வெளிப்படும் இடமாகிய ப்ரஜ்ஞாதாரை (இது "ஊ" என்பதாகும்) நானே ஆவேன். மஹாவிஷ்ணுவின் இயக்கத்துடன் ஸம்பந்தம் கொண்டதும், ஞானத்தின் பிறப்பிடமும் (இது "உ" என்பதாகும்) நானே ஆவேன்.

32. ஆநந்தம் யோஜயேத் தஸ்யா: புரஸ்தாத் ஸூக்ஷ்மயா த்ருசா
அப்ரமேயமத: பூர்வம் பாவயேத் ஸூக்ஷ்மயா த்ருசா

பொருள் - ஸூக்ஷ்மமான பார்வையை அடைந்த உபாஸகன் ஒருவன், ஆனந்தத்தை (இது "ஆ" என்பதாகும்), அதன் முன்பாக (அதாவது "உ" என்பதற்கு முன்பாக) சேர்ப்பானாக. தொடர்ந்து, அதே ஸூக்ஷ்மமான பார்வை மூலம் அப்ரமேயம் (இது "அ" என்பதாகும்) என்பதை அதன் முன்பாக (அதாவது "ஆ" என்பதற்கு முன்பாக) சேர்ப்பானாக [இவை அனைத்தும் அடுத்த ச்லோகத்தில் விளக்கப்பட்டுள்ளன].

33. அப்ரமேயோதிதா ஸாஹம் மஹாநந்தமயீ சுபா
ஆதாரபூதா ப்ரஜ்ஞாயா வ்யோமேசே ஸம்ஸ்திதா புந:

34. புநர்விஸ்ருஷ்டியோகாய பரமேச்வரம் ஆகதா
ஷஷ்டீ ஸமுத்ஹ்ருதா வித்யா சப்ததாச்சார்த்த தச்ச தே

பொருள் – அப்ரமேயம் என்பதிலிருந்து வெளிப்படும் மந்த்ரமாகிய இவள் (அதாவது நான்), மிகுந்த ஆனந்தம் மற்றும் மங்களத்துடன் கூடியவளாக உள்ளாள். ஞானத்தின் ஆதாரமாக உள்ள இவள், வ்யோமேசத்தில் (அதாவது "ம்" என்பதாகும்) வசிக்கிறாள்; இதனைத் தொடர்ந்து ப்ரளயகாலத்தில் இவள் பரமேச்வரனை (அதாவது "ஹ்" என்பதாகும்) அடைகிறாள் [இதுவரை கூறப்பட்டது என்னவென்றால்: அ + ஆ + உ + ஊ + ம் + ஹ் = ஔஹ் என்னும் காம பீஜ மந்த்ரமாகும்]. இப்படியாக உனக்கு ஆறாவது வித்யையானது, சப்தம் மற்றும் பொருளுடன் விளக்கப்பட்டது.

35. இயம் பீஜத்ரயீ வித்யா கதிதா த்ரிபுராஹ்வயா
 வ்யுத்க்ரமாநுக்ரமாப்யாம் ஸா ஹி ஆத்மஸாம்ய ப்ரதாபி ச
36. விதேயம் காமதுக் ப்ரோக்தா ஜப ஹோமாதி ஸாதிதா
 வ்யஞ்ஜந ஸ்வர ஸ்ம்யோகாத் தஸ்யா பேதாந் பஹூவிது:

பொருள் – மூன்று பீஜங்களுடன் (ஐம், க்லீம், ஔஹ்) கூடிய இந்த மந்த்ர தொகுப்பானது த்ரிபுரா எனப்படுகிறது. இதனைப் பயிற்சி செய்யத் தொடங்கும்போது முதலிம் பின்வரிசையிலும் (இது வ்யுத்க்ரமம் ஆகும் – "ஔஹ், க்லீம், ஐம்" என்பதாகும்), அதன் பின்னர் நேர்வரிசையிலும் (இது அநுக்ரமம் ஆகும் – "ஐம், க்லீம், ஔஹ்" என்பதாகும்) உச்சரிக்கவேண்டும். இது ஆத்மாவுடன் ஒற்றுமையை உண்டாக்குகிறது. இதனை ஜபம் மற்றும் ஹோமம் ஆகியவற்றுடன் உச்சரிக்கும்போது, விரும்பிய அனைத்தையும் அளிக்கிறது. இதில் உள்ள மெய்யெழுத்துக்கள் மற்றும் உயிரெழுத்துக்கள் ஆகியவற்றை வெவ்வேறுவிதமாக மாற்றி அமைக்கும்போது, இது பலவிதமான வடிவங்களை அடைவதை கற்றோர் அறிவர்.

ஸ்ரீரங்கநாச்சியார் திருவடிகளே சரணம்
ஸ்ரீகமலவல்லி நாச்சியார் திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

பகவத் ராமானுஜர் அருளிச் செய்த

ஸ்ரீபாஷ்யம்

(பகுதி – 301)

1-4-12 ப்ராணதய: வாக்யசேஷாத்

பொருள் - முடிக்கும் பகுதி மூலமாக, ப்ராணன் போன்றவையே கூறப்பட்டதாகிறது.

ஸித்தாந்தம் – இந்தப் பகுதி முடியும்போது, ப்ரு. (4-4-18) - ப்ராணஸ்ய ப்ராணமுத சக்ஷுஷச் சக்ஷு: ச்ரோத்ரஸ்ய ச்ரோத்ரம் அந்நஸ்யாந்நம் மநஸோ யே மநஸோ யே மநோ விது: - ப்ராணனுக்கு ப்ராணனாகவும், கண்ணுக்கு கண்ணாகவும், அந்நத்திற்கு அந்நமாகவும், மனதிற்கு மனமாகவும் எதனை அறிகிறார்களோ – என்று கூறப்படுகிறது. ஆகவே, ப்ரஹ்மத்தை ஆதாரமாகக் கொண்டுள்ள ப்ராணன் போன்றவையே இங்கு, “பஞ்ச பஞ்சஜநா” என்று அறியப்படுகிறது.

பூர்வபக்ஷம் – ப்ரு. (4-4-17) - யஸ்மிந் பஞ்ச பஞ்சஜநா - எந்த ஆத்மாவில் இந்த ஐந்து பஞ்சஜநா என்பவையும் – என்ற மந்த்ரமானது, காண்வர்கள் மற்றும் மாத்யந்தினர்களுக்குப் பொதுவானதாகும். ஆனால், ப்ரு. (4-4-18) – ப்ராணஸ்ய ப்ராணம் – என்று மந்த்ரத்தைக் காண்வர்கள் ஓதும்போது அவர்கள், அதில் “அந்நஸ்ய” என்று படிப்பதில்லை. அப்படியென்றால், அவர்களுடைய சாகையில், “பஞ்ச பஞ்சஜநா” என்பதன் மூலம் ப்ராணன் போன்றவை கூறப்படுகிறது என்று உரைக்கமுடியாது அல்லவோ? அடுத்த ஸூத்ரத்தில் விடை அளிக்கிறார்.

1-4-13 ஜ்யோதிஷா ஏகேஷாம் அஸதி அந்நே

பொருள் - முன்பு உள்ள ஜ்யோதி என்ற பதம் மூலம், அந்நம் என்பது இல்லாதபோது, அவ்விதம் அறியப்படுகிறது.

ஸித்தாந்தம் - "ஏகேஷாம்" என்றால் "காண்வசாகை பாடத்தில்" என்று பொருள். "அஸ்தி அந்நே - அந்நம் கூறப்படவில்லை" என்றாலும், "ஜ்யோதிஷாம்" – ஜ்யோதி என்ற சொல்லால் "பஞ்சஜநா" என்பது இந்த்ரியங்களைக் குறிக்கிறது என்று அறியப்படுகிறது. இந்தப் பகுதி முடியும்போது இதனையே கூறுகிறது. இங்கு கூறப்படுவது என்னவென்றால் – "ப்ரு. (4-4-17) – யஸ்மிந் பஞ்ச பஞ்சஜநா" என்ற மந்த்ரத்தின் முன்பாக உள்ள, ப்ரு. (4-4-16) – தம் தேவா ஜ்யோதிஷாம் ஜ்யோதிராயுர் ஹோபாஸதே அம்ருதம் - ஜ்யோதிகள் அனைத்திற்கும் ஜ்யோதியாகவும், அழிவற்றதாகவும், ப்ராணிகள் சுவாசிக்கக் காரணமாக உள்ளதும் ஆகிய அந்தப் பரமாத்மாவையே தேவர்கள் உபாஸிக்கிறார்கள் - என்ற மந்த்ரம் உள்ளது; இதில், ஜ்யோதிகளுக்கெல்லாம் ஜ்யோதியாக ப்ரஹ்மம் படிக்கப்படுகிறது; இதன் மூலம், ப்ரஹ்மத்தால் ப்ரகாசம் பெறுவதாக சில ஜ்யோதிகள் உள்ளன என்றும், அவை தங்களுடைய ப்ரகாசத்திற்கு ப்ரஹ்மத்தையே சார்ந்துள்ளன என்றும் கூறப்படுகிறது; ஆனால் இந்த ஜ்யோதிகள் எவை என்று நிச்சயிக்காமல், இந்த வரியானது நின்றுவிடுகிறது. ஆனால் தொடர்ந்து வருகின்ற ப்ரு. (4-4-17) – யஸ்மிந் பஞ்ச பஞ்சஜநா - என்பதன் மூலம், இவ்விதம் கடந்த வரியில் நிச்சயிக்காமல் விடப்பட்ட விஷயமான, "இவை வெளிவிஷயங்களை ப்ரகாசப்படுத்துகின்ற (அல்லது உணர்த்துகின்ற) இந்த்ரியங்களே ஆகும்" என்பது தீர்மானிக்கப்படுகிறது. ப்ரு. (4-4-18) – ப்ராணஸ்ய ப்ராணம் - என்பதில் உள்ள (இரண்டாவது) ப்ராணன் என்னும் சொல் மூலம், ஸ்பர்ச இந்த்ரியமே (சரீரம் அல்லது தொடு உணர்வு) எடுக்கப்பட்டது எனலாம்; ஏனென்றால் ஸ்பர்ச இந்த்ரியம் என்பது வாயுவுடன் தொடர்பு கொண்டது என்பதாலும், முக்ய ப்ராணனை "ஜ்யோதி" என்ற பதமானது காண்பிக்க இயலாது என்பதாலும் ஆகும்.

“சக்ஷுஸ்ச்ச சக்ஷு:” என்பதில் உள்ள “சக்ஷுஸ்ச்ச” என்பதன் மூலம், பார்க்கும் இந்த்ரியமும் (கண்), “ச்ரோத்ரஸ்ய ச்ரோத்ரம்” என்பதில் உள்ள “ச்ரோத்ரஸ்ய” என்பதன் மூலம், கேட்கும் இந்த்ரியமும் (காது) கூறப்பட்டது. “அந்நஸ்ய அந்நம்” என்பதில் உள்ள “அந்நஸ்ய” என்பதன் மூலம், நுகரும் இந்த்ரியம் (மூக்கு) மற்றும் சுவைக்கும் இந்த்ரியம் (நாக்கு அல்லது வாய்) ஆகிய இரண்டுமே கூறப்பட்டது; இது தந்திரமாக இவ்விதம் கூறப்பட்டது (தந்திரம் என்றால், ஒருமுறை செய்யும் ஒரு செயல் மூலமே பலவும் நிறைவேறுதல் ஆகும்). பூமியானது, மணம் (கந்தம்) என்பதுடன் ஸம்பந்தம் கொண்டுள்ளதால், அந்நம் என்ற சொல் மூலமாக, நுகரும் இந்த்ரியம் கூறப்பட்டதாகிறது (அந்நம் பூமியிலிருந்து விளைகிறது, பூமிக்கு மணம் உள்ளது, ஆகவே அந்நத்திற்கு மணம் உள்ளது என்று கருத்து). அந்நம் என்பது உண்ணக்கூடியது என்பதால், அது சுவைக்கும் இந்த்ரியத்துடன் தொடர்புள்ளது என்றும் எடுக்கப்பட்டது.

“மநஸ: யே மந:” என்பதில் உள்ள “மநஸ:” என்பது, மனத்தைக் குறிக்கும். இங்கு மணம் மற்றும் சுவை ஆகிய இந்த்ரியங்கள் தந்திரமாக எடுக்கப்பட்டதால், ஐந்து என்று எண்ணிக்கை கூறும் வாக்கியத்துடன் (பஞ்ச பஞ்சஜநா) முரண்படாமல் உள்ளது. ஆக, ஞானத்தை ஏற்படுத்துகின்ற மனம் முடிய உள்ளதான இந்த்ரியங்களே, “பஞ்சஜநா” என்று கூறப்பட்டன என்றாகிறது (ஆனால் மனம் என்பதுடன் இந்த்ரியங்கள் சேர்ந்து, ஆறு என்றாகும் அல்லவோ என்ற சந்தேகத்திற்கு விடை அளிக்கிறார்) இங்கு முரண்பாடு ஏற்படாமல் இருப்பதற்காக, நுகருதல் மற்றும் சுவைத்தல் ஆகிய இரண்டையும் தந்திரத்தால் (ஒரே விஷயத்தில் பலவற்றைக் கூறுதல்) ஒன்றாகவே எடுக்கப்பட்டது என்று கருத்து.

ஆகவே, ப்ரு. (4-4-17) - யஸ்மிந் பஞ்ச பஞ்சஜநா ஆகாசச்ச ப்ரதிஷ்டித: - எந்த ஆத்மாவில் இந்த ஐந்து பஞ்சஜநங்களும் ஆகாசமும் நிலைநிற்கின்றனவோ – என்ற வாக்கியத்தால், “பஞ்சஜநா” என்ற சொல் மூலம் கூறப்பட்ட இந்த்ரியங்களும், “ஆகாசம்” என்பதன் மூலம் கூறப்பட்ட மஹாபூதங்களும், ப்ரஹ்மத்தில் நிலைநிற்கின்றன என்பதும்; அனைத்து தத்வங்களும் ப்ரஹ்மத்தையே அண்டியுள்ளன என்பதும் கூறப்பட்டு, இதன் காரணமாக கபிலதந்த்ரத்தின் மூலம் வெளிப்படுவதான இருபத்து ஐந்து தத்வங்கள் குறித்து இங்கு ஏதும் வரவில்லை

என்பதும் உணர்த்தப்படுகிறது. ஆகவே அனைத்து வேதாந்தங்களிலும், தத்வங்களுடைய எண்ணிக்கை என்பது, ஸாங்க்யர்களுடைய எண்ணிக்கையின்படியே இருந்தாலும் இல்லாவிட்டாலும், கபிலதந்த்ரத்தின் மூலம் வெளிப்படுகின்ற தத்வங்களை ஒப்புக்கொள்வதில்லை.

தென்னரங்கன் திருவடிகளே சரணம்
தென்னரங்கன் செல்வம் முற்றும் திருத்தி வைத்த இராமாநுசன்
திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீவேதாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த

ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம்

(பகுதி – 301)

மூலம் – "நாவேதநிஷ்டா ஜநஸ்ய ராஜந் ப்ரதேயம் ஏதத் பரமம் த்வயா பவேத் | விவித் ஸமாநஸ்ய விபோதகாரகம் ப்ரபோதஹேதோ: ப்ரணதஸ்ய சாஸநம்", "ந தேயம் ஏதச்ச ததா அநுதாத்மநே சடாய க்லீபாய ந ஜிஹ்யபுத்தயே | ந பண்டிதஜ்ஞாய பரோபதாபிநே தேயம் த்வயேதம் விநிபோத யாத்ருசே", "ச்ரத்தாந்விதாயத குணாந்விதாய பராபவாதாத்விரதாய நித்யம் | விசுத்தயோகாய புதாய சைவ க்ரியாவதே அத க்ஷமிணே ஹிதாய", "விவிக்த சீலாய விதிப்ரியாய விவாதபீதாய பஹுச்ருதாய | விஜாநதே சைவ ததா ஹிதக்ஷமாதமாய நித்யாத்ம ஸமாய தேஹிநாம்", "ஏதைர் குணைர் ஹீநதமே ந தேயம் ஏதத் பரம் ப்ரஹ்ம விசுத்தமாஹு: | ந ச்ரேயஸா யோக்ஷ்யதி தாத்ருசே க்ருதம் தர்ம ப்ரவக்தாரமபாத்ரதாநாத்", "ப்ருத்வீமாம் யத்யபி ரத்நபூர்ணாம் தத்யாந்ந தேயம் த்விதமவ்ரதாய | ஜிதேந்த்ரியாயைதத ஸம்சயம் தே பவேத் ப்ரதேயம் பரமம் நரேந்த்ர", "கரால மா தே பயமஸ்து கிஞ்சித் ஏதத் பரம் ப்ரஹ்ம ச்ருதம் த்வயா அத்ய | யதாவத் உக்தம் பரமம் பவித்ரம் விசோகம் அத்யந்தம் அநாதிமத்யம்"

விளக்கம் – மஹாபாரதம் சாந்திபர்வம் (313-33 முதல் 38: வசிஷ்டர் உரைப்பது) - நாவேதநிஷ்டா ஜநஸ்ய ராஜந் ப்ரதேயம் ஏதத் பரமம் த்வயா பவேத் | விவித் ஸமாநஸ்ய விபோதகாரகம் ப்ரபோதஹேதோ: ப்ரணதஸ்ய சாஸநம் – ராஜனே! உண்மையை அறியவேண்டும் என்று விருப்பம் கொண்டு, அத்தகைய ஞானத்தை அடைவதற்காக வந்து வணங்கி நிற்பவனுக்கு ஞானத்தை அளிக்கவல்ல இந்த சாஸ்த்ரத்தை, வேதங்களில் இழியாதவனுக்கு உபதேசித்தல் கூடாது – என்றும், ந தேயம் ஏதச்ச ததா அநுதாத்மநே சடாய க்லீபாய ந ஜிஹ்யபுத்தயே | ந பண்டிதஜ்ஞாய பரோபதாபிநே தேயம் த்வயேதம் விநிபோத யாத்ருசே – இதனைப்

பொய் கூறுபவனுக்கும், வஞ்சகம் நிறைந்தவனுக்கும், நபும்ஸகனுக்கும், தாழ்ந்த புத்தி கொண்டவனுக்கும், தன்னை மேதையாக எண்ணுபவனுக்கும், மற்றவர்களைத் துன்புறுத்துபவனுக்கும் உரைத்தல் கூடாது; யாருக்கு உரைக்கலாம் என நான் கூறக் கேட்பாயாக – என்றும், ச்ரத்தாந்விதாயத குணாந்விதாய பராபவாதாத்விரதாய நித்யம் | விசுத்தயோகாய புதாய சைவ க்ரியாவதே அத க்ஷமிணே ஹிதாய || விவிக்த சீலாய விதிப்ரியாய விவாதபீதாய பஹுச்ருதாய | விஜாநதே சைவ ததா ஹிதக்ஷமாதமாய நித்யாத்ம ஸமாய தேஹிநாம் – ச்ரத்தை நிறைந்தவனுக்கும், சிறந்த குணங்கள் கொண்டவனுக்கும், மற்றவர்களைத் தூற்றாதவனுக்கும், சிறந்த வாதங்களை ஏற்பவனுக்கும், உபதேசங்களை உள்வாங்கும் திறன் கொண்டவனுக்கும், சிறந்த ஒழுக்கம் உள்ளவனுக்கும், கர்மங்களை இயற்றும்போது உண்டாகும் துன்பங்களைப் பொறுப்பவனுக்கும், உலகத்திற்கு நன்மையை மட்டுமே விரும்புபவனுக்கும், தனிமையில் வசிக்க விரும்புபவனுக்கும், சாஸ்த்ரங்களை அறிவதில் மகிழ்பவனுக்கும், பயனற்ற வாதங்களைக் கண்டு அஞ்சுபவனுக்கும், ஆசார்யனிடமிருந்து அறிந்தவனுக்கும், செய்ந்நன்றி நிறைந்தவனுக்கும், பொறுமை மற்றும் இரக்கம் நிறைந்தவனுக்கும், நித்யமாக உள்ள அனைத்து ஆத்மாக்களையும் தன்னைப் போன்றே எண்ணுபவனுக்கும் உபதேசிக்கலாம் – என்றும், ஏதைர் குணைர் ஹீநதமே ந தேயம் ஏதத் பரம் ப்ரஹ்ம விசுத்தமாஹு: | ந ச்ரேயஸா யோக்ஷ்யதி தாத்ருசே க்ருதம் தர்ம ப்ரவக்தாரமபாத்ரதாநாத் – இத்தகைய நற்குணங்கள் அற்றவனுக்கு, தூய்மையான பரப்ரஹ்மம் குறித்து உபதேசிக்கும் இந்தச் சாஸ்த்ரத்தை உபதேசம் செய்தல்கூடாது என்று முன்னோர்கள் கூறுகிறார்கள். இதனை மீறி உபதேசம் செய்தால் எந்தவிதமான நன்மையும் உண்டாகாது – என்றும், ப்ருத்வீமாம் யத்யபி ரத்நபூர்ணாம் தத்யாந்ந தேயம் த்விதமவ்ரதாய | ஜிதேந்த்ரியாயைதத ஸம்சயம் தே பவேத் ப்ரதேயம் பரமம் நரேந்த்ர – ராஜனே! இந்த உலகில் உள்ள அனைத்து இரத்தினங்களையும் தக்ஷிணையாக அளித்தால் கூட, வ்ரதம் இல்லாத ஒருவனுக்கு இந்தச் சாஸ்த்ரத்தை உபதேசித்தல் கூடாது. புலன்களைத் தன்வசப்படுத்திய ஒருவனுக்கு, இதனை உபதேசிக்கலாம் – என்றும், கரால மா தே பயமஸ்து கிஞ்சித் ஏதத் பரம் ப்ரஹ்ம ச்ருதம் த்வயா அத்ய | யதாவத் உக்தம் பரமம் பவித்ரம் விசோகம் அத்யந்தம் அநாதிமத்யம் – ராஜனே! நீ அச்சம் கொள்ளவேண்டாம். பரப்ரம்ஹம் குறித்த

சாஸ்த்ரத்தை நீ இப்போது கேட்டாய். தொடக்கம், மத்யம் மற்றும் முடிவு அற்றதும் துன்பம் இல்லாததும் தூய்மையானதும் ஆகிய பரப்ரஹ்மம் குறித்து உனக்கு உள்ளது உள்ளபடி கூறப்பட்டது – என்றும் கூறியது காணலாம்.

தூப்புல் பிள்ளை திருவடிகளே சரணம்

... தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:
ஸ்ரீரங்கநாச்சியார் ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிச் செய்த

ஆசார்ய ஹ்ருதயம்

இதற்கு ஸ்வாமி மணவாள மாமுனிகள் அருளிச் செய்த வ்யாக்யானம்
(பகுதி – 121)

வ்யாக்யானம் - [12] (யானே எஞ்ஞான்று மென்றத்தாலே யென்னில், அயர்ப்பாய்ச் சமயமதி கொடுத்து உள்ளம் பேதஞ் செய்கை உன் தொழிலென்பர்) “யானே யென்னை யறியகிலாதே யானே யென்தனதே யென்றிருந்தேன்” என்றும், “எஞ்ஞான்றும்” என்று தொடங்கி, “மெய்ஞ்ஞானமின்றி வினையியல் பிறப்பழுந்தி” என்றும் நீர் சொன்ன அஜ்ஞாநாந்யதா ஜ்ஞாநாதிகளாலே காணும் உமக்கந்த கர்த்ருத்வ போக்த்ருத்வங்களுண்டாய்த்தென்று சொன்னோமாகில்; “அயர்ப்பாய்த் தேற்றமுமாய்”, “மாட்டாத பல சமய மதி கொடுத்தாய்”, “உள்ளம் பேதஞ் செய்திட்டு உயிருண்ட வுபாயங்களும்” என்று ஜ்ஞாநாஜ்ஞாநங்களிரண்டும் நீயிட்ட வழக்காகையாலே அஜ்ஞாநாந்யதாஜ்ஞாநாதிகளை விளைக்கையும் உன் க்ருத்யமென்பர். (ஜீவப்ரக்ருதி சைதந்யம் நீங்கும் வ்ரதஹேது, அக மேனியிலழுக்கறுக்கை அபிமாநிக்ருத்யம்) “யாதானுமோராக்கையில் புக்கு” இத்யாதிப்படியே ஸூக்ஷ்ம ப்ரக்ருதி விசிஷ்டனாய்க் கொண்டு ஸ்வகர்மாநுகுணமாக நாநாவித சரீரங்களிலே ஒன்றுவிட்டு ஒன்றைப் பற்றித் தடுமாறித் திரியும் ஜீவனுக்கு தேஹேந்த்ரியத்வேந போக்யத்வேநாவஸ்திதையான ப்ரக்ருதியைப் பற்றிக் கிடக்கிற சைதந்யம், “யாதானும் பற்றி நீங்கும் விரதம்” என்கிறபடியே ப்ரக்ருதி ப்ராக்ருதங்களிலே ஏதேனுமொன்றையவலம்பித்து நம்மை விட்டகலும் வ்ரதத்துக்கு ஹேதுவாயிருப்பதொன்று, “அகமேனியொழியாமே” என்று நமக்கந்தரங்க சரீரமான இவ்வாத்மாவைப் பற்றிக் கிடக்கிற ப்ரக்ருதி ஸம்பந்தரூப மாலிந்யத்தைப் போக்குகை, இவ்வாத்மாவுக்கபிமானியான நம்முடைய க்ருத்யமாயிருந்தது. அன்றிக்கே (ஜீவப்ரக்ருதி) இத்யாதிக்கு, “இதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம், ஜீவபூதாம்” என்று சொல்லப்பட்ட ஜீவனாகிற ப்ரக்ருதியில் கிடக்கிற சைதந்யம், “யாதானும் பற்றி நீங்கும்” என்கிறபடியே ப்ரக்ருதி ப்ராக்ருதங்களில் ஏதேனுமொன்றைப் பற்றி நம்மை

விட்டகலும் வ்ரத ஹேதுவாயிருப்பதொன்று; அசித்து சரீரமாயிருக்கச்செய்தே அப்படியன்றிக்கே, "அகமேனி" என்று நமக்கு அந்தரங்க சரீரமாயிருக்கிற இவ்வாத்ம வஸ்துவில் கிடக்கிற ப்ரக்ருதி ஸம்பந்த ரூபமான மாலிந்யத்தைப் போக்குகை இதுக்கு அபிமானியான நம்முடைய க்ருத்யமாயிருந்ததென்னவுமாம்.

விளக்கம் – "(யானே எஞ்ஞான்றும் என்றத்தாலே என்னில்) – திருவாய்மொழி (2-9-9) - யானே என்னை அறியகிலாதே யானே என்தனதே என்றிருந்தேன் – என்றும், திருவாய்மொழி (3-2-7) – எஞ்ஞான்றும் - என்று தொடங்கி திருவாய்மொழி (3-2-7) – மெய்ஞ்ஞானமின்றி வினையியல் பிறப்பழுந்தி - என்றும் நீவிர் உரைத்த அஜ்ஞானம் மற்றும் அந்யதா ஞானம் ஆகியவற்றால் அல்லவோ நீவிர் கூறிய அந்த இரண்டு தன்மைகளும் உமக்கு ஏற்பட்டன?", என்று ஸர்வேச்வரன் கேட்டான். இதற்கு நம்மாழ்வார், "(அயர்ப்பாய்ச் சமயமதி கொடுத்து உள்ளம் பேதஞ் செய்கை உன் தொழிலென்பர்) - திருவாய்மொழி (7-8-6) - அயர்ப்பாய்த் தேற்றமுமாய் - என்றும், திருவாய்மொழி (3-4-4) – மாட்டாத பல சமய மதி கொடுத்தாய் – என்றும், திருவாய்மொழி (5-10-4) - உள்ளம் பேதம் செய்திட்டு உயிருண்ட உபாயங்களும் - என்றும் கூறுவதற்கு ஏற்ப, ஞானம் அற்றும் அஜ்ஞானம் ஆகிய இரண்டும் நீ உண்டாக்கும் நிலைகளே என்பதால், அஜ்ஞானம் மற்றும் அந்யதா ஞானம் ஆகியவற்றை ஏற்படுத்துவதும் உனது செயல்களே ஆகும்" என்றார்.

(ஜீவப்ரக்ருதி சைதந்யம்) – [குறிப்பு: இந்தப் பத்தி தொடங்கி, பதினான்காம் எண்ணுள்ள பத்தி முடிய உள்ள பலவும், ஸர்வேச்வரன் தனது திருவுள்ளத்தில் நம்மாழ்வாரைக் குறித்து எண்ணும் விஷயங்களைச் கூறுவதாக உள்ளது] திருவிருத்தம் (95) – யாதானும் ஓர் ஆக்கையில் புக்கு - என்பதற்கு ஏற்ப ஸூக்ஷ்மமான சரீரத்தைக் கொண்டதாக உள்ள ஆத்மாவானது தனது கர்மங்களுக்கு ஏற்ப, பலவிதமான ஸ்தூல சரீரங்களில் ஒன்று விட்டு ஒன்று மாறியபடி தடுமாறித் திரிந்து நிற்கிறது. இப்படிப்பட்ட ஆத்மாவிற்கு சரீர வடிவமாகவும், இந்திரியங்களுடைய வடிவமாகவும், அனுபவிக்கப்படும் வடிவமாகவும் உள்ளதான சரீரத்தைப் பற்றி நிற்கின்ற அறிவானது, (நீங்கும் வ்ரதஹேது என்னும் ஸர்வஜ்ஞர் இவர்) - திருவிருத்தம் (95) - யாதானும் பற்றி நீங்கும் விரதம் - என்பதற்கு ஏற்ப, இந்த உலகில் உள்ள ஏதேனும் ஒன்றைப் பற்றியபடி நின்று, நம்மைவிட்டு அகலும் விரதத்திற்குக் காரணமாக உள்ளது

என்று இவர் நன்கு அறிந்தவர் ஆவார். (அகமேனியில் அழுக்கறுக்கை அபிமாநிக்ருத்யம் என்னும் ஸர்வஜ்ஞர் இவர்) – திருவாய்மொழி (9-7-10) – அகமேனி ஒழியாமே – என்பதற்கு ஏற்ப, ஸர்வேச்வரனாகிய நமக்கு மிகவும் அந்தரங்கமாக உள்ள சரீரமான இந்த ஜீவாத்மாவை அண்டி நிற்கின்ற சரீர ஸம்பந்தம் காரணமாக உண்டாகும் தோஷங்களை நீக்குதல் என்னும் செயலானது, இந்த ஜீவாத்மா மீது மிகுந்த ஈடுபாடு கொண்ட ஸர்வேவரனாகிய நம்முடையதே ஆகும் என்பதை இவர் நன்கு அறிந்தவர் ஆவார். அல்லது "ஜீவப்ரக்ருதி சைதந்யம் நீங்கும் வ்ரதஹேது, அக மேனியிலழுக்கறுக்கை அபிமாநிக்ருத்யம்" என்பதற்கு வேறுவிதமாகவும் பொருள் கூறலாம். கீதை (7-3) – இதஸ்த்வந்யாம் ப்ரக்ருதிம் வித்தி மே பராம், ஜீவபூதாம் - ஜீவாத்மா என்ற சரீரமானது மகிவும் உயர்ந்தது - என்று கூறுவதற்கு ஏற்ப, ஜீவாத்மா என்ற சரீரத்தில் உள்ள ஞானமானது, திருவிருத்தம் (95) - யாதானும் பற்றி நீங்கும் - என்பதற்கு ஏற்ப, இந்த உலகில் உள்ள வஸ்துக்களில் ஏதேனும் ஒன்றை அண்டி நின்று, நம்மை விட்டு அகலும் விரதத்திற்குக் காரணமாக உள்ளது. ஸர்வேச்வரனாகிய நமக்கு அசித் வஸ்துக்களும் சரீரமாக உள்ளபோலும், திருவாய்மொழி (9-7-10) - அகமேனி - என்பதற்கு ஏற்ப, நமக்கு மிகவும் அந்தரங்கமான சரீரமாக உள்ள ஜீவாத்வாவின் மீது உண்டாகக் கூடியதான சரீரத் தொடர்பில் ஏற்பட்ட தோஷத்தை நீக்குதல் என்பது, இந்த ஆத்மாவை மிகவும் விரும்புகின்ற நம்முடைய செயலே ஆகும் என்பதை இவர் நன்றாக அறிந்தவர் ஆவார்.

வ்யாக்யானம் - [13] (தான் நல்கும் பந்தம் நிருபாதிகம்) "நல்கித்தான் காத்தளிக்கும் பொழிலேழும் வினையேற்கே, நல்கத்தானாகாதோ நாரணனைக் கண்டக்கால்" என்னும்படி நாம் ஸ்நேஹ பூர்வகமாக ரக்ஷிக்கைக்கடியான நாராயணத்வ ப்ரயுக்தமான ஸம்பந்தம் நிருபாதிகமாயிருந்தது. (ஸௌஹார்த்த மெஞ்ஞான்றும் நிற்கும்) "தனிமாப்புகழே யெஞ்ஞான்றும் நிற்கும்படியாய்த்தான் தோன்றி" என்று நாமரூபங்களையிழந்து தமோபூதமான ஸமயத்திலே இவற்றையுண்டாக்க நினைத்த அத்விதீயமான மஹாகுணமென்கிற ஸௌஹார்த்தம், காலதத்வமுள்ளதனையும் ஒருவன் பண்ணுமுபகாரமேயென்று அத்தையே அநுஸந்திப்பார் ஹ்ருதயத்திலே நிற்கும்படியாக என்கையாலே அந்த ஸம்பந்தமடியாக ஸர்வர்க்கும் நன்மையை ஆசாஸிக்கைக்கடியான ஸௌஹார்த்த குணத்திலும் கண்ணழிவு சொல்லப்போகாது. (பிணக்கிபேதியாத ஜ்ஞாநாதிவைகல்யமில்லை) "பிணக்கியாவையும் யாவரும் பிழையாமல் பேதித்தும்

பேதியாததோர் கணக்கில் கீர்த்தி வெள்ளக்கதிர் ஞான மூர்த்தியினாய்" என்னும்படி ஸம்ஹ்ருதி ஸமயத்திலே ஸகல சேதநாசேதநங்களையும் நாமரூபவிபாக ரஹிதமாம்படி கலசி, ஸ்ருஷ்டி தசையிலே ஒருவர் கர்மம் ஒருவர்க்குத் தட்டாதபடி பிரித்து ஸ்ருஷ்டித்தும், தனக்கொரு பேதமின்றிக்கேயிருக்கும் ஜ்ஞாநாதிகளையுடைய நமக்கு ஜ்ஞாந சக்திகளில் குறைவு சொல்லவிடமில்லை. (ஏக மூர்த்தியில் அல்லல் மாய்த்த யத்ந பலித்வங்கள் நம்மது) "ஏகமூர்த்தி" என்கிற பாட்டிலே காரணங்களோடு கார்யங்களோடு வாசியற ஸகலத்தையும் ஸ்ருஷ்டித்து, அவற்றினுடைய தாரணார்த்தமாக அந்தராத்மாவாய் ஸ்ருஷ்டமான பதார்த்தங்களினுடைய ரக்ஷணத்துக்காக க்ஷீரார்ணவத்திலே கண்வளர்ந்தருளி, இப்படி ஸர்வகாலமும் ஒருபடிபட்ட அநுக்ரஹ சீலனாகைக்கடியான ப்ராப்தியையுடையையான நீ உன் திருமேனிக்கு வேண்டும் போகோபகரணங்களெல்லாம் "பூசும் சாந்தி"ற்படியே என்பக்கலிலே யுண்டாக்கி நிர்த்துக்கனானாயேயென்று இவர் பேசினபடியே இவரைப் பெறுகைக்கு யத்னம் பண்ணுகையும் பெற்றாலுகக்கும் பலித்வமும் நமக்கேயுள்ள தொன்றாயிருந்தது.

விளக்கம் - (தான் நல்கும் பந்தம் நிருபாதிகம் என்னும் ஸர்வஜ்ஞர் இவர்) - திருவாய்மொழி (1- 4-5) - நல்கித்தான் காத்தளிக்கும் பொழிலேழும் வினையேற்கே, நல்கத்தானாகாதோ நாரணனைக் கண்டக்கால் - என்பதற்கு ஏற்ப ஸர்வேச்வரனாகிய நாம், நம்முடைய ஸ்நேஹத்தை முன்னிறுத்திக் காப்பாற்றுவதற்கு அடிப்படையாக உள்ளதான, நாராயணன் என்பதாக உள்ள தன்மையால், ஒரு ஸம்பந்தம் ஏற்படுகிறது. இத்தைய ஸம்பந்தமானது, நமக்கு எந்தவிதமான காரணத்தாலும் ஏற்படுவதில்லை; நமக்கு இயல்பாகவே உள்ளதாகும் என்பதை இவர் நன்றாக அறிந்தவர் ஆவார். (ஸௌஹார்த்தம் எஞ்ஞான்றும் நிற்கும் என்னும் ஸர்வஜ்ஞர் இவர்) - திருவாய்மொழி (8-10-7) - தனிமாப்புகழே யெஞ்ஞான்றும் நிற்கும்படியாய்த்தான் தோன்றி - என்பதற்கு ஏற்ப, ப்ரளயத்தின்போது பெயர் மற்றும் உருவம் ஆகியவற்றை இழந்து, அனைத்தும் தமஸ் என்ற இருள் நிலையை அடைந்து நிற்கும்போது, "இவற்றை மீண்டும் முன்பு இருந்தது போன்றே உண்டாக்கவேண்டும்" என்று ஸ்நேஹம் ஏற்படுகிறது; காலம் என்ற தத்வம் உள்ளது முடிய, "இத்தகைய ஸ்நேஹம் என்பது, ஒருவன் நமக்கு செய்யும் பெரிய உபகாரம் ஆகும்" என்று அதனையே எண்ணியபடி இருப்பர்; "இவ்விதமாக உள்ளவர்கள் இதயத்தில் நிற்கும்படியாக நாம் உள்ளோம்" என்று உள்ளதால், அத்தகைய ஸம்பந்தத்தின் விளைவாக அனைவருக்கும் நமையை

மட்டுமே விரும்புதல் என்பதற்கு அடிப்படையாக உள்ள ஸ்நேஹம் என்ற குணத்திலும் குறை ஏற்படாது என்பதை இவர் நன்கு அறிந்தவர் ஆவார். (பிணக்கி பேதியாத ஜ்ஞாநாதி கைவல்யம் இல்லை என்னும் ஸர்வஜ்ஞர் இவர்) - திருவாய்மொழி (6-2-8) - பிணக்கியாவையும் யாவரும் பிழையாமல் பேதித்தும் பேதியாததோர் கணக்கில் கீர்த்தி வெள்ளக்கதிர் ஞான மூர்த்தியினாய் – என்பதற்கு ஏற்ப "அனைத்தும் அழியும் நேரத்தில் சேதந அசேதநங்களை, பெயர் மற்றும் ரூபங்கள் என்பதான வேறுபாடுகள் அற்றதாக ஒன்றாகத் திரட்டி, ஸ்ருஷ்டி காலத்தில் ஒருவருடைய கர்மபலன்கள் வேறு ஒருவருக்குச் சென்று விடாதபடி பிரித்துப் படைத்து நிற்கும்போதிலும், தனக்கு எந்தவிதமான பேதமும் இன்றி உள்ளதான ஞானம், சக்தி ஆகியவற்றைப் பரிபூர்ணமாகக் கொண்டவன்", என்று இவர் உரைத்தார்; ஆகவே ஸர்வேச்வரனாகிய நம்முடைய ஞானம் மற்றும் சக்தி போன்றவற்றுக்குக் குறைவு இல்லை என்று இவர் நன்றாக அறிந்தவர் ஆவார். (ஏக மூர்த்தியில் அல்லல் மாய்த்த யத்ந பலித்வங்கள் நம்மது என்னும் ஸர்வஜ்ஞர் இவர்) – திருவாய்மொழி (4-3-3) – ஏகமூர்த்தி என்னும் பாசுரத்தில், "காரணங்கள் மற்றும் கார்யங்கள் என்பதான வேறுபாடுகள் இன்றி அனைத்தையும் படைத்து, அவற்றைத் தாங்கவேண்டும் என்பதற்காக அவற்றின் அந்தராத்மாவாக, ஸ்ருஷ்டிக்கப்பட்ட பொருள்கள் அனைத்தையும் காக்கவேண்டும் என்பதற்காகத் திருப்பாற்கடலில் கண்வளர்ந்தருளி, இவ்விதம் அனைத்து காலத்திலும் ஒரே போன்ற க்ருபை உள்ளவனாக இருத்தலுக்கு அடிப்படையான ஸம்பந்தம் கொண்டுள்ள நீ, உனது திருமேனிக்குத் தேவையாக உள்ள இனிமையான அனைத்தையும், திருவாய்மொழி (4-3-2) – பூசும் சாந்து - என்பதில் உரைத்தபடி என்னிடம் உண்டாக்கி, நீ துக்கம் அற்றவனாக உள்ளாயே", என்று உரைத்தார்; ஆகவே இவரை நாம் பெறுவதற்குச் செய்யும் முயற்சியும், அத்தகைய முயற்சியால் ஏற்படும் பயனும் நமக்கே உள்ளது என்பதை இவர் நன்றாக அறிந்தவர் ஆவார்.

வ்யாக்யானம் - [14] (நாம் தனிநின்ற ஸ்வதந்த்ரரென்று அவனே யறிந்தனமே என்னும் ஸர்வஜ்ஞரிவர்) "தனி நின்ற சார்விலாமூர்த்தி" என்று கார்யவர்க்கமழிந்தவன்று ஸச்சப்தவாச்யனாய் நின்று "ருத்ரம் ஸமாச்ரிதா தேவா:" இத்யாதி ப்ரக்ரியையாலே உனக்கோர் அபாச்ரயமில்லாதபடி யிருக்கிறவனே! என்கையாலே நாம் வேண்டிற்றைச் செய்யும்படி நிரங்குச ஸ்வதந்த்ரனென்று அறுதியிட்டு, "அவனே அகல் ஞாலம் படைத்திடந்தான்" என்று தொடங்கி,

"அவனே மற்றெல்லாமுமறிந்தனமே" என்று ஸகல கார்யங்களிலும் ஸஹகாரி நிரபேக்ஷனாய் ஸ்வாதீந ஸகல சேதநாசேதந ஸ்வரூபஸ்திதிகனா யிருக்குமவனென்றறிந்தோம் என்று சொல்லும்படியான ஸர்வஜ்ஞராயிருப்பாரொருவரிவர்.

விளக்கம் - (நாம் தனிநின்ற ஸ்வதந்த்ரர் என்று அவனே அறிந்தனமே என்னும் ஸர்வஜ்ஞர் இவர்) – "பெரிய திருவந்தாதி (71) – தனி நின்ற சார்விலா மூர்த்தி – என்பதற்கு ஏற்ப, படைக்கப்பட்ட கார்யம் அனைத்தும் அழிந்த நாளில் "ஸத்" என்று கூறப்படும் வஸ்துவாக நின்று, மஹாபாரதம் - ருத்ரம் ஸமாச்ரிதா தேவா: - தேவர்கள் ருத்ரனை அடைகிறார்கள் – என்று கூறுவதற்கு ஏற்ப, எந்த ஒரு பற்றுக்கொம்பும் அவசியம் இல்லாதபடி உள்ளவனே", என்று இவர் உரைக்கிறார். இதன் மூலம், ஸர்வேச்வரனாகிய நாம், வேண்டியதைச் செய்யவல்ல சுருக்கம் அற்ற சுதந்திரம் கொண்டவன் என்பதை அறுதியிடுகிறார்; மேலும், திருவாய்மொழி (9-3-2) – அவனே அகல் ஞாலம் படைத்திடந்தான் - என்று தொடங்கி , திருவாய்மொழி (9-3-2) - அவனே மற்றெல்லாமும் அறிந்தனமே – என்று கூறுவதால், அனைத்து கார்யங்களிலும் எந்தவிதமான துணையையும் எதிர்பாராமல் உள்ளவனாக, தனக்கு வசப்பட்டதான அனைத்து சேதந அசேதநங்களுடைய ஸ்வரூபம் நிலைப்பதற்குக் காரணமாக உள்ளவன்" என்பதையும் கூறுகிறார். இவ்விதம் இவர் பலவற்றையும் நன்கு அறிந்தவர் ஆகிறார்.

ஸ்வாமி மணவாளமாமுனிகள் திருவடிகளே சரணம்

ஸ்வாமி அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:
ப்ரபந்நஜந கூடஸ்தரான ஸ்வாமி நம்மாழ்வார் அருளிச் செய்த

திருவாய்மொழி

இதற்கு ஸ்வாமி வடக்குத் திருவீதிப் பிள்ளை அருளிச் செய்த
முப்பத்தாறாயிரப்படி என்னும் ஈடு வ்யாக்யானம்
மூலமும், எளிய தமிழ்நடையும்
(பகுதி – 266)

4-3-8 என்னதாவி மேலையாய் ஏர்கொளேழுலகமும்
துன்னி முற்றுமாகி நின்ற சோதி ஞானமூர்த்தியாய்
உன்னதென்னதாவியும் என்னதுன்னதாவியும்
இன்ன வண்ணமே நின்றாய் என்றுரைக்க வல்லேனே

பொருள் - எனது ஆத்மாவின் மீது மிகுந்த ப்ரேமை கொண்டவனாக உள்ளதால், உன்னால் வ்யாபிக்கப்பட்டதும் மிகுந்த தேஜஸ் நிறைந்ததும் ஆகிய ஏழு லோகங்களிலும் பரிபூர்ணமாக வ்யாபித்து நின்று, அனைத்து வஸ்துக்களும் உனக்கு ப்ரகாரங்கள் என்றாகும்படியாக நின்ற, தேஜோரூபமான ஞானத்தை ஸ்வரூபமாகக் கொண்டவனே! எனது ஆத்மா உன்னுடையது, உனது திவ்யாத்ம ஸ்வரூபம் என்னுடையது; இவ்விதம் உள்ள உன்னை, “இன்ன தன்மையுடன் நின்றாய்” என்று என்னால் உரைக்க இயலுமோ?

அவதாரிகை - ஒருவரையொழிய ஒருவர்க்குச் செல்லாதபடி பிறந்த கலவி, பேச்சுக்கு நிலமன்று என்கிறார்.

பொருள் – “ஒருவரை விடுத்து ஒருவருக்கு மட்டுமே உள்ளது என்று கூற இயலாத சேர்க்கையானது, விரிவாக உரைக்க இயலாதபடியான தன்மை கொண்டதாகும்”, என்கிறார்.

வ்யாக்யானம் - (என்னதாவிமேலையாய்) என் ஸத்தையைப் பெற்று அத்தால் வந்த ப்ரீதி ப்ரகாசத்தையுடையையாய் என்னுதல்; என்னைப் பெறவேணும் என்னும் அபிநிவேசத்தை யுடையையாய் என்னுதல். என்னதாவி மேலையாயென்று ஸம்போதநமாதல். (ஏர்கொள் இத்யாதி) இவரைப் பெற்ற ப்ரீதியாலே வ்யாப்தியும் புதுக்கணித்ததென்னுதல்; ஒருவனைப் பிடிக்க நினைத்து அவன் பக்கலுண்டான அபிநிவேசத்தாலே ஊரை வளைவாரைப்போலே, தம்மையகப்படுத்துகைக்காக வ்யாப்தனானான் என்று இருக்கிறாராதல். (ஏர்கொள் ஏழுலகமும்) இவரோடே வந்து கலந்த பின்பு ஜகத்துக்குப் பிறந்த புதுக்கணிப்பு. "உண்டியுடல் காட்டும்" என்னுமாபோலே, சரீரி பூர்ணனானவாறே சரீரமும் புதுக்கணிக்குமிறே; ஜகச்சரீரியிறே அவன். (துன்னி முற்றுமாகி நின்ற) ஜாதி, வ்யக்திதோறும் பரிஸமாப்ய வர்த்திக்குமாபோலே குறைவற வ்யாபித்து நின்றபடி. (சோதி ஞான மூர்த்தியாய்) ஜ்யோதி ரூபமான ஜ்ஞாநத்தை ஸ்வரூபமாகவுடையவனே! (உன்னைதென்னதாவியும் என்னதுன்னதாவியும்) என்னுடைய ஆவி உன்னது, உன்னுடைய ஆவி என்னது. என் ஸ்வரூபம் நீயிட்ட வழக்கு, உன் ஸ்வரூபம் நானிட்ட வழக்கு. இவ்விடத்தை ஆளவந்தார் அருளிச்செய்யா நிற்கச்செய்தே இருந்த முதலிகளிலே சிலர், "இவ்வாத்மாவின் ஸ்வரூபம் அவனிட்ட வழக்கென்றால் கூடுமே; அவன் ஸ்வரூபம் இவனிட்ட வழக்காகையாவது என்?" என்று கேட்க; "இவன் 'தன்னை அவனுக்காக்குவன்' என்ற அன்று கர்மம தகையவுங்கூடும்; ஸர்வேச்வரன் தன்னை இவனிட்ட வழக்காக்குமன்று நிவாரகரில்லை; ஆன பின்பு அதுவே நிலைநிற்பது. இன்னம், இவன் இவன் ஸ்வரூபம் அவனிட்ட வழக்காகக் கூடுமோ? என்று இதிலேகாணும் ஸந்தேஹிக்க வேண்டுவது" என்று அருளிச்செய்தார். (இன்ன வண்ணமே நின்றாய்) இப் ப்ரகாரத்திலே நின்றாய். (என்று உரைக்கவல்லேனே) இப்படிப்பட்ட உன் ப்ரணயித்வ குணத்தை என்னால் பாசுரமிட்டுச் சொல்லாயிருந்ததோ? என்கிறார்.

விளக்கம் – (என்னதாவிமேலையாய்) - எனது ஆத்மாவைப் பெற்றதன் விளைவாக உண்டான ப்ரீதியின் மிகுதியைக் கொண்டவன். அல்லது "என்னது ஆவி மேலையாய்" என்று அவனை அழைப்பது போன்று உரைப்பதாகவும் கொள்ளலாம். (ஏர்கொள் இத்யாதி) – இவரைப் பெற்ற ப்ரீதி காரணமாக, எங்கும் வ்யாபித்து நிற்கும் நிலையில் கூட ஒரு புதுமை காணப்பட்டது. ஒருவனைப் பிடிக்க

எண்ணி, அவன் மீது உள்ள ஆசை காரணமாக ஊர் முழுவதையும் வளைப்பது போன்று, நம்மாழ்வாராகிய தன்னைப் பெறுவதற்காக எங்கும் வ்யாபித்து நிற்கிறான் என்கிறார். (ஏர்கொள் ஏழுலகமும்) - அவன் இவருடன் வந்து சேர்ந்த காரணத்தால் இந்த ஜகத்திற்கு ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது; "ஒருவன் நல்ல உணவை உண்டான்" என்பதை அவனுடைய சரீரமே வெளிப்படுத்துவது போன்று ஆகும்; ஆத்மா பரிபூர்ணமாக இருந்தால், சரீரமும் புத்துணர்ச்சி பெறும். இந்த ஜகத்தின் ஆத்மா அவன் அல்லவோ? (துன்னி முற்றுமாகி நின்ற) - ஒரு குறிப்பிட்ட ஜாதியின் தன்மைகள் அனைத்தும், அந்த ஜாதியைச் சேர்ந்த தனித்தனிப் பொருள்களில் காணப்படுவது போன்று, இவன் எங்கும் குறைவின்றி வ்யாபித்து நிற்கிறான். (சோதி ஞான மூர்த்தியாய்) - ஜ்யோதிரூபமான ஞானத்தை ஸ்வரூபமாகக் கொண்டவனே. (உன்னைதென்னதாவியும் என்னதுன்னதாவியும்) - எனது ஆவி உன்னுடையது, உனது ஆத்மா என்னுடையது. எனது ஸ்வரூபம் உனக்கு அடங்கியது, உனது ஸ்வரூபம் எனக்கு அடங்கியது. இந்த இடத்தில் இவ்விதம் ஸ்வாமி ஆளவந்தார் அருளிச்செய்தபோது அவரிடம் ஒரு சிலர், "நம்மாழ்வாருடைய ஸ்வரூபம் அவனுக்கு அடங்கியது என்று உரைத்தல் சரியே ஆகும்; ஆனால் அவனுடைய ஸ்வரூபமானது இவருக்கு அடங்கியது என்று எப்படிக் கூறமுடியும்?", என்றனர். இதற்கு ஆளவந்தார், "சேதநன் ஒருவன் தனது ஸ்வரூபத்தை ஸர்வேச்வரனுக்கு மட்டுமே அடிமை என்று எண்ணும்போது, அந்தச் சேதநனுடைய கர்மங்கள் காரணமாக அந்த நிலைக்கு இடையூறு ஏற்படலாம். ஆனால் ஸர்வேச்வரன் தனது ஸ்வரூபத்தை சேதநனுக்கு வசப்பட்டதாக மாற்றுவதைத் தடுக்க ஏதும் இல்லை. ஆகவே இது பொருந்தும். இந்த நிலையில் இனியும் சந்தேகம் ஏற்படுமோ?" என்றார். (இன்ன வண்ணமே நின்றாய்) - இந்த விதத்தில் நீ நின்றாய், (என்று உரைக்கவல்லேனே) - இவ்விதம் உனது ப்ரேமையை என்னால் சொற்கள் கொண்டு உரைக்க இயலுமோ?

4-3-9 உரைக்கவல்லேனல்லேன் உன்னுலப்பில் கீர்த்தி வெள்ளத்தின்
கரைக்கணென்று செல்வன் நான் காதல் மையலேறினேன்
புரைப்பிலாத பரம்பரனே பொய்யிலாத பரஞ்சுடரே
இரைத்து நல்ல மேன்மக்களேத்த யானுமேத்தினேன்

பொருள் – உனது அடியார்களிடம் நீ கொண்டுள்ள ஆழ்ந்த ப்ரேமை குறித்து நான் உரைப்பதற்கான சக்தி கொண்டவன் அல்லன். ஏன் என்றால், முடிவற்றதான உனது கீர்த்தி என்ற ஸமுத்ரத்தின் கரையை என்னால் காண இயலுமோ? எனது அளவற்ற காதலால் நான் கலக்கம் அடைந்தேன். எந்தவிதமான தோஷமும் அற்ற, அனைத்தைக் காட்டிலும் அனைத்துவிதத்திலும் உயர்ந்த, பொய் கலவாத காரணத்தினால் எல்லையற்ற தேஜஸ்ஸுடன் நிற்பவனே! மிகுந்த ஞானம் கொண்டவர்கள் அதிகமான மகிழ்வுடன் கூடி நின்று உன்னைப் புகழ்ந்தபோது, நானும் அவர்களைக் கண்டு உன்னைப் புகழ்ந்தேன்.

அவதாரிகை – "அநுபூதமானது பேசத் தட்டு என்?", என்ன; "உன் ப்ரணயித்வ ப்ரகர்ஷம் என்னுடைய பேச்சுக்கு நிலமன்று" என்கிறார்.

விளக்கம் – "அனுபவிக்கும் ஒரு பொருள் குறித்து விரிவாக உரைப்பதற்கு என்ன தடை உள்ளது?", என்று ஸர்வேச்வரன் ஆழ்வாரிடம் கேட்டான். இதற்கு ஆழ்வார், "உனது எல்லையற்ற ப்ரேமையும், அதனால் உனக்கு உண்டாகும் மகிழ்வும் எனது சொற்களால் உரைக்கவல்லது அல்ல", என்கிறார்.

வ்யாக்யானம் - (உரைக்க வல்லேனல்லேன்) உன் ப்ரணயித்வ குணத்தை அநுபவித்துக் குமிழி நீருண்டு போமித்தனை போக்கிப் பேசித் தலைக்கட்ட மாட்டுகிறிலேன். எல்லாம் பேசவொண்ணாதாகில், பேசலாம் அம்சம் பேசினாலோ? என்னில், (உன் இத்யாதி) உன்னுடைய முடிவில்லாத ப்ரணயித்வத்தால் வந்த கீர்த்தி ஸாகரத்தினுடைய கரையிலேதான் என்னாலே செல்லப்போமோ? இப்படி கரையருகும் செல்ல அரிய விஷயத்தில் நீர் பேசுவதாக உத்யோகிப்பானென்? என்னில், (காதல் மையலேறினேன்) என் ப்ரேமத்தாலே மிக்க கலக்கத்தை யுடையனானேன். பிச்சேறினாரை "நீ இப்படி செய்வானென்" என்னக் கடவதோ? "இவ்விஷயத்தில் நீர் ப்ரமிப்பானென்? ப்ரமிப்பார்க்கு ஓராலம்பநம் வேண்டாவோ?" என்ன; "நித்யஸூரிகள் பித்தேறியேத்தக் கண்டேன். அத்தாலே செய்தேன்" என்கிறார். நித்யஸூரிகளோடு இவரோடு அவன் தன்னோடு வாசியற்றிறே இவ்விஷயம் இருப்பது. ஸர்வஜ்ஞனாய் ஸர்வசக்தியான

தான் அறியப்புக்காலும், தனக்கும் தன் தன்மை அறிவு அரியனாயிறே இருப்பது. தன்னையறியப் புக்க வேதங்கள் பட்டது படுமத்தனை தானும்.

விளக்கம் - (உரைக்க வல்லேனல்லேன்) - உனது காதல் தன்மையை அனுபவித்தபடி, நெஞ்சம் தடுமாறி நிற்பேன் அல்லாமல், அதனைக் குறித்து உரைக்கும் சக்தி கொண்டவன் அல்லன். இதற்கு ஸர்வேச்வரன், "ஆனால் அனைத்தையும் கூறவேண்டாம், உரைக்க இயன்றவற்றை மட்டும் உரைக்கலாம் அல்லவோ?", என்றான். இதற்கு விடை அளிக்கிறார். (உன் இத்யாதி) - எல்லையற்றதாக உள்ள உனது ப்ரேமையால் வெளிப்படுவதான புகழ் என்னும் ஸமுத்திரத்தின் எல்லையை நான் அடையஇயலுமோ? இதற்கு ஸர்வேச்வரன், "சரி. ஆனால் இவ்விதம் கரையின் அருகில் கூடச் செல்ல இயலாத விஷயம் குறித்து நீவிர் பேச முயல்வது ஏன்?", என்றான்; இதற்கு விடை அருளிச்செய்கிறார். (காதல் மையலேறினேன்) - எனது ப்ரேமை காரணமாக நான் கலக்கம் அடைந்தேன். மயக்கத்தில் உள்ள ஒருவரை நோக்கி, "நீ இப்படிப் புலம்புவது சரியா?", என்று கேட்கலாமோ? இதனைக் கேட்ட ஸர்வேச்வரன் ஆழ்வாரிடம், "இந்த விஷயத்தில் நீவிர் ஏன் மயங்கவேண்டும்? மயங்கி நிற்பதற்கு ஒரு பற்றுக்கொம்பு வேண்டும் அல்லவோ?" என்றான். இதற்கு நம்மாழ்வார், "நித்யஸூரிகள் பித்து ஏறிய நிலையில் உன்னைப் புகழ்ந்தபடி உள்ளதை நான் கண்டேன். இதன் விளைவாக நானும் பித்து ஏறி நின்றேன்", என்றார். நித்யஸூரிகள், நம்மாழ்வார் மற்றும் ஸர்வேச்வரன் என வேறுபாடு இன்றி அல்லவோ இந்த விஷயம் உள்ளது? அனைத்தையும் அறிந்தவனாகவும், அனைத்து சக்திகளையும் கொண்டவனாகவும் ஸர்வேச்வரன் உள்ளபோதிலும், தன்னை குறித்துத் தானே முற்றிலுமாக அறியும் அறிவு அற்றவனாகவே உள்ளான். அவனை அறிவதற்கு முயலும் வேதங்கள் படும்பாட்டை, அவன் தன்னைத்தானே அறிய முனைந்து அடைகிறான்.

வ்யாக்யானம் – (புரைப்பிலாத பரம்பரனே பொய்யிலாத பரஞ்சுடரே) நீ ஸர்வஸ்மாத்பரனாயிருக்கிற இருப்பில் புரையில்லாதாப்போலே என்னோட்டைக் கலவியால் வடிவிற் பிறந்த புகரிலும் புரையின்றிக்கே யிருக்கிறவனே! அன்றிக்கே நிரவதிகமான ப்ரணயித்வ குணம், ஸத் பாவத்தில் வந்த புகர் வடிவிலே தோற்ற இருக்கிறவனே! என்னுதல். (இரைத்து இத்யாதி) பரமபக்தி யுக்தராய்க் கொண்டு

கடல் கிளர்ந்தாற்போலே இரைத்துக் கொண்டு நித்யஸூரிகள் ஏத்தக் காண்கையாலே நானும் ஏத்தினேனல்லது நான் சக்தனாய் ஏத்தினேனோ? என்கிறார்.

விளக்கம் - (புரைப்பிலாத பரம்பரனே பொய்யிலாத பரஞ்சுடரே) – அனைத்தைக் காட்டிலும் நீ உயர்ந்தவனாக உள்ள அந்த உயர்த்தியில் எந்தவிதமான தோஷமும் இல்லாதது போன்று, என்னுடன் நீ கலந்து நிற்பதால் ஏற்படும் தேஜஸ்ஸிலும் எந்தவிதமான குறையும் அற்றவனாக நீ உள்ளாய். அல்லது வேறுவிதமாகவும் பொருள் கூறலாம்; எல்லையற்ற காதலாது உண்மையில் அழிவற்று உள்ளது போன்று, என்னுடைய சேர்கையானது பொய்யின்றி உள்ளதால், அதன் விளைவாக ஏற்பட்ட தேஜஸ் என்பது உனது வடிவில் காணப்படும்படியாக நிற்பவனே! (இரைத்து இத்யாதி) - மிகுந்த பக்தியைக் கொண்ட நித்யஸூரிகள், கடல் கிளர்ந்து எழுவது போன்று, பெருத்த ஓசையுடன் உன்னைத் துதிப்பதை நான் காண்பதால், உன்னை நானும் துதித்தேன்; இவ்விதம் அல்லாமல் உன்னைத் துதிக்கும் திறன் எனக்கு இல்லை.

ஸ்வாமி நம்மாழ்வார் திருவடிகளே சரணம்
ஸ்வாமி நம்பிள்ளை திருவடிகளே சரணம்
ஸ்வாமி வடக்குத்திருவீதிப்பிள்ளை திருவடிகளே சரணம்

...தொடரும்

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமானுஜாய நம:

ஸ்ரீரங்கநாயகி ஸமேத ஸ்ரீரங்கநாத பரப்ரஹ்மணே நம:

ஸ்வாமி ஆளவந்தார் அருளிச் செய்த

சது: ச்லோகீ

இதற்கு ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை மற்றும் ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் அருளிச் செய்த வ்யாக்யானங்கள் மூலமும், எளிய தமிழ்நடையும்

(பகுதி – 11)

ஒரு சிலர், "பகவானுடைய ஸ்வரூபத்தில் உள்ள ஒரு பகுதியே பரஸ்பர இன்பத்தை அனுபவிக்கும்விதமாக தனியான ஒரு பெண் பாகத்தை அடைக்கிறது. இதுவே லக்ஷ்மீ என்ற சொல்லிற்கான பொருள் ஆகும். இவ்விதம் கூறுவதன் மூலம், சாஸ்த்ரங்களில் பேதத்துடன் கூடியது என்றும், பேதம் அற்றது என்றும், அறிபவனாக உள்ளது என்றும் கூறப்படுவதற்கு விரோதம் ஏற்படாமல் உள்ளது", என்கிறார்கள். இந்தக் கருத்தானது, "ப்ரஹ்ம ஸ்வரூபம் பிரிக்க இயலாதது ஆகும்" என்று கூறுவதன் மூலம் தள்ளப்படுகிறது. ஆனால், ப்ரஹ்மபுராணத்தில் - நர நாரீமயன் ஹரி: - ஸ்ரீஹரி புருஷனாகவும் ஸ்திரீயாகவும் உள்ளான் – என்று கூறப்பட்டது அல்லவோ என்று கேட்கலாம். இதற்கு விடை அளிப்போம்; ஆனால் அதே இடத்தில் ஸநத்குமார ஸம்ஹிதையில் - ஜ்யோத்ஸ்நேவ ஹிமதீதிதே: - சந்த்ரனுக்கு நிலவு போன்று - என்ற உதாரணம் காணலாம்; அதாவது ப்ரகாசத்திற்கு ஆதாரமாக உள்ள ஒரு வஸ்துவை "ப்ரகாசமயமாக உள்ளது" என்று உரைப்பது போன்று, ஸ்வரூபங்களில் எந்தவிதமான பேதங்களுக்கும் இடம் அளிக்காமல் பொருள் கொள்ளவேண்டும். இதன் மூலம், "விதையாக உள்ளவற்றின் முளைக்கக்கூடிய பகுதிகள் தனியாக வளர்கின்றன. இதே போன்று கார்யப்பொருள்களாக பரிணாமம் அடைவதற்கு உபாதானக்காரனமாக உள்ள ப்ரஹ்ம ரூபத்தின் ஒரு பகுதியே, தனது ஸ்வபாவத்தால் தனியாகப் பிரிந்து, லக்ஷ்மீ என்றாகிறது", என்று கூறப்படும் கருத்தும் தள்ளப்படுகிறது; மேலும், "ப்ரஹ்ம

ஸ்வரூபத்தில் மாற்றம் ஏற்படுவதில்லை" என்று ப்ரஹ்மஸூத்ரத்தில் நிருபிக்கப்பட்டதால் இந்தக் கருத்து நிராகரிக்கப்படுகிறது.

ஸ்வாமி ஆளவந்தார் திருவடிகளே சரணம்

ஸ்வாமி பெரியவாச்சான்பிள்ளை திருவடிகளே சரணம்

ஸ்வாமி நிகமாந்த மஹாதேசிகன் திருவடிகளே சரணம்

... தொடரும்